அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை

Ang Mo Kio Tamil Methodist Church

27th செப்டம்பர் / September 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. ஆஷா**
Call to Worship — Mrs. Asha

இறைவணக்கப்பாடல் — **பாடகர் குழு**
Introit — Choir

ஜெபம் — **திருமதி. ஆஷா**
Prayer — Mrs. Asha

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

திவ்விய ஐக்கியத்தில்

1. திவ்விய ஐக்கியத்தில் நடப்போமேயாகில்
அருள் ஜோதியிலே நிலைப்போம்
வல்ல ஆவியினால் தேவ சித்தஞ் செய்தால்
பெரும் பாக்யம் பெற்றே வாழுவோம்

கீழ்ப்படிவோம் தேவசித்தம் செய்வோம்
திருவாக்கை எப்போதும் நம்பி கீழ்ப்படிவோம்

2. மேகம் தோன்றுமானால் அன்பின் சூரியனால்
அது நில்லாமல் மறைந்தேபோம்
சோர்வு சந்தேகமும், அவநம்பிக்கையும்
அணுகாமலே முன் செல்லுவோம்

3. எந்த வேளையிலும், இன்ப துன்பத்திலும்
அருள்நாதர் சகாயஞ் செய்வார்
வரும் சோதனையோ, மன சஞ்சலமோ
இவை நீக்கியே பாதுகாப்பார்.

4. நம்பி கீழ்ப்படிந்தே திருப்பாதத்திலே
நம்மை முற்றிலும் ஒப்புவிப்போம்
பெருநன்மை ஈவார் அபிஷேகஞ் செய்வார்
தேவ ஆவியைப் பெற்றுக்கொள்வோம்

✝ **மாறி வாசித்தல் 39ம் ஞாயிறு “சங்கீதம் 118”** — **சபையார் இணைந்து**
Congregation

“களிகூர்ந்து மகிழக்கடவோம்”

Psalter Reading – “Psalm 118”

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

துதி ஆராதனை
Singspiration

சாட்சியின் நேரம்
Time of Testimony

ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்
Thanksgiving & Pastoral Prayer

பரமண்டல ஜெபம் — **சபையார் இணைந்து**
Lord’s Prayer — Congregation

சிறப்புப் பாடல் — **பாடகர் குழு**
Special Song — Choir

✝ **காணிக்கைப் பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

இயேசுவே உம் நாமத்தினால்

1. இயேசுவே உம் நாமத்தினால்
இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே

எங்கள் தேவனே எங்கள் ராஜனே
என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்

2. நிலையில்லா இவ்வுலகில்
நெறி தவறி அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
நீங்கா ஜீவன் கண்டடைந்தோம்

3. பொன்னை நாடி மண்ணையடைந்தோம்
புகழ்தேடி ஏமாற்றம் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயமே பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால்

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***<u>திருமறைப் பாடம்</u>*** — ***மிஸ். அடினா***
<u>Scripture Reading</u> — Ms. Adina
உபாகமம் 6 : 1 – 6
Deuteronomy 6 : 1 – 6

அருளுரை — ***மறைதிரு. ஆர்.பிரபு***
Sermon — Rev. R. Prabhu

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>பாதம் ஒன்றே வேண்டும்</u>

பாதம் ஒன்றே வேண்டும்; - இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

1. நாதனே, துங்கமெய் - வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய - தூதர் தொழுஞ் செய்ய. – பாதம்

2. சீறும் புயலினால் வரரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் - நீர்மேல் நடந்த உன் - பாதம்

3. வீசும் கமழ் கொண்ட - வாசனைத் தைலத்தை
ஆசையுடன் - மரி - பூசிப் பணிந்த பொற் – பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் தூக்கி நடந்த நற் - பாதம்

5. நானிலத்தோர் உயர் - வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத் -தானே கொடுத்த உன் – பாதம்

6. பாதம் அடைந்தவர்க் - காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு நாதனே, என்றும் உன் – பாதம்

அறிவிப்புகள்
Announcements

✝ ***<u>மனப்பாட வசனம்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verse</u> — Congregation
1 யோவான் *4 : 2*
1 John 4 : 2

2. **தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால், மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.**

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing